**நாள்: 22.04.2025**

O.S. No. 81/2022

**வா.சா.1 பெயர்: ராமதாஸ், த/பெ. சிவசுப்ரமணியன்**

<u>1, 2 பிரதி**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u> :

1) 1, 2 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்துள்ளேன். ரெத்தினத்தம்மாள் பெயரில் பட்டா எப்போது பெயர் மாற்றம் பெற்றது என்றால் தெரியாது. ரெத்தினத்தமாள் பெயரில் பட்டா இருந்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பிறகு மேற்படி ரெத்தினம்மாள் பெயரிலான பட்டா விவரம் குறித்து விவரம் தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். **அ** பதிவேடு என் தகப்பனார் சிவசுப்ரமணியன் பெயரிலுள்ளது. எனது வழக்குரையில் ரெத்தினத்தம்மாள் பெயரிலிருந்து என் தகப்பனார் சிவசுப்ரமணியன் பெயருக்கு மாறியது குறித்து விவரம் சொல்லியுள்ளீர்களா என்றால் ஆவணங்கள் கொடுத்துள்ளேன். அவ்வாறு எவ்வித ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் நான் கொடுத்துள்ளேன்.

2) சிவசுப்ரமணியன் பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் பெற்றது தொடர்பாக குறிப்பிட்டு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் **அ** பதிவேடு நகல் கொடுத்துள்ளேன். மேற்படி **அ** பதிவேட்டில் பெயர் மாற்றம் ஏன் ஏற்பட்டது குறித்து தகவல் அறியும் சட்டத்தின் கீழ் தகவல் எதுவும் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து ரெத்தினத்தம்மாள் பெயரில் 2023 ஆம் ஆண்டு வரையில் வருவாய் பதிவேட்டில் இருந்து வந்த விவரம் தெரிந்துக்கொண்டேனா என்றால் சரிதான். எனது எதிர் பதிலுரையில் அதற்கான விளக்கம் கொடுத்துள்ளேன். நத்தம் நிலவரி திட்டத்தின் கீழ் வேறு ஒருவருக்கு சொந்தமான பட்டா சொத்தினை பெயர் மாற்றம் செய்ய உரிமை கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து எனது தகப்பனாருக்கு பட்டாபடி சொந்தம் என்று சொல்கிறேனா என்றால் பூர்வீக சொத்து என் தகப்பனாருக்கு பட்டா கிடைத்தது. தாவா சொத்தில் ரெத்தினத்தம்மாளுக்கு எவ்வித சொந்தமும் இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரிதான்.

3) நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 ஆவணம் என்பது கடந்த 13.10.2021ம் தேதியில் திருவாரூர் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு நான் அனுப்பிய கடித்தத்தின் நகல் ஆகும். வா.சா.ஆ.3 ஆவணத்தின் பத்தி 4 ல் தாவா சொத்து பொறுத்து பக்கிரிசாமி கோனார் அவர்களின் பாட்டி ரெத்தினத்தம்மாள் பெயரில் பத்திரம் உள்ளது என கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் 2 புல எண்களை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவை 82/1 பி, 82/2 பி ஆகும். மேற்படி 2 புல எண்கள் தொடர்பாக இந்த வழக்கின் 2 ம் பிரதிவாதியின் மீது இதே நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று முடிவுற்று அது எனக்கு

சாதகமாகி பின்னர் மேல்முறையீட்டில் பாதகமாகியுள்ளது என்றால் உண்மையல்ல. இந்த வழக்கின் 2 ம் பிரதிவாதியான உதயகுமாரின் தகப்பனார் சீனிவாச கோனாருக்கு எதிராக புல எண்.82/11 ன் பேரில் வழக்கு தாக்கல் செய்திருந்து விசாரணை நீதிமன்றத்தில் எனக்கு சாதகமாகியும், மேல்முறையீட்டில் எனக்கு பாதகமாகியுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கு 2 வது மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4) வா.சா.ஆ.3 ஆவணம் வாயிலாக தாவா சொத்தானது ரெத்தினத்தம்மாள் பெயரிலுள்ளது என்பது என்னால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதி என்றால் சரியல்ல. மேற்படி ரெத்தினத்தமாளின் பேரன் பெயர் பிரபுராம் என்றால் தவறு. ரெத்தினத்தமாளின் வாரிசு பிரபுராம் என்றாலும், மேற்படி பிரபுராம் 02.03.2022 ம் தேதியில் 2 ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை பொறுத்து கிரைய ஆவணம் செய்துக்கொடுத்துள்ளார் என்றாலும், சரியல்ல. மேற்படி கிரைய ஆவணத்தின்படி தாவா சொத்தின் அனுபவம் 1, 2 பிரதிவாதிகளிடம் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் போலீயான பதிவு பெறாத ஆவணம் ஆகும். எதிர் வழக்குரை தாக்கல் செய்த பிறகு மேற்படி ஆவணம் தொடர்பாக வேறு எதுவும் சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. பதில் எதிருரை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.3 ஆவணம் வாயிலாக ரெத்தினத்தம்மாளுக்கு தாவா சொத்து சொந்தம் என்பதை நான் ஒப்புக்கொண்ட வகையில் மேற்படி 02.03.2022 தேதிய கிரைய ஆவணம் என்னால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஆவணம் என்றால் தவறு.

5) தாவா சொத்தில் 1, 2 பிரதிவாதிகளால் கட்டுமானங்கள் செய்து வருவது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். காவல் துறை விசாரணையில் நான் வருவாய்துறை ஆவணங்களை காட்டினேன். காவல் துறை விசாரணையில் நான் என் தரப்பில் எவ்வித ஆவணங்களையும் காட்டவில்லை என்றாலும், என் தரப்பில் எவ்வித உண்மையும் இல்லை என்று மனு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தை நான் அனுபவம் செய்து வருவது தொடர்பாக நான் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வருவாய் ஆவணங்களான வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆகிய ஆவணங்கள் உரிமைமூலத்தை நிரூபிக்க கூடிய ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல.

6) கடந்த 13.10.2021-ல் தாவா சொத்தில் 1, 2 பிரதிவாதிகளின் கட்டுமான பணிகளை நிறுத்த கோரிகேட்டு தான் நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கை 2022 ல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மற்ற அரசு துறைகளுக்கு நான் மனு அளித்திருந்த காரணத்தினால் தாமதமாக தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி அரசு துறைகளுக்கு நான் மனு அளித்திருப்பது தொடர்பாக வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை

என்று சொன்னால் சரியல்ல. நான் சிவசுப்ரமணியன் வாரிசு என்ற முறையில் தான் இந்த வழக்கில் வசப்பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சிவசுப்ரமணியனின் மற்ற வாரிசுகளை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து 1, 2 பிரதிவாதிகளின் குடும்ப அனுபவத்தில் கடந்த 40 ஆண்டுகளாக இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கானது ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்காக முன்விரோதம் காரணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

7) நீதிமன்ற ஆணையர் கோரி என்னால் மனு தாக்கல் செய்யப்பட்டு, ஆணையர் தாவா சொத்தை நேரில் பார்வையிட்டு சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **மேற்படி ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1 ஆகும். அத்துடன் கண்டுள்ள நில அளவையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.2 ஆகும்.** நீ.ம.சா.ஆ.2 ல் நில அளவையர் தாவா சொத்தானது ரெத்தினத்தம்மாள் பெயரிலுள்ள என அறிக்கை அளித்துள்ளார் என்று சொன்னால் சரிதான். பெயர் மாற்றம் தொடர்பான ஆவணங்களை சமர்ப்பித்துள்ளேன். மேற்படி நீ.ம.சா.ஆ.2 ல் நில அளவையர் கிராம ஆவணங்கள் மற்றும் இணைய வழியில் பட்டா மாறுதல் ஆகாமல் உள்ளது என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் நில அளவையர் அறிக்கைக்கு மறுப்புரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் ரெத்தினத்தம்மாள் வாரிசு அல்ல என்றால் ஆமாம். நான் ரெத்தினத்தம்மாள் வாரிசு இல்லை என்பதால் தாவா சொத்தில் உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தூய கரங்களோடு நீதிமன்றத்தை அணுகவில்லை என்றாலும், வழக்குரைக்கு முரணாக முன்னுக்கு பின் முரணமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

//மேற்படியார் தரப்பில் குறுக்கு விசாரணையின்போது நீ.ம.சா.ஆ. 1 மற்றும் நீ.ம.சா.ஆ.2 ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்பட்டது. //

MOHAMED BASIL S
Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.04.20 18:08:36 +0530

District Munsif,

Tiruvarur.